இதழ் 03 மலர் 01
பெப்ரவரி 2012 - ஏப்ரல் 2012

'தலைவி' காலாண்டு இதழ்
இல.3, ரொறிங்ரன் அவனியூ.
கொழும்பு - 07.
தொ.பேசி: 0112 506272
தொ.நகல்: 0112 585190
மின்னஞ்சல்: info@viluthu.org

காலாண்டு இதழ்
# தலைவி
தலைமைத்துவத்தை நோக்கி...

# சமூக கணக்குக் காட்டலை (Social Accountability) உணர்த்திய வீதி நாடகம்





சேவை வழங்குனர்களான அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்கள், மாற்றத்தை விழையும் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏனைய சேவை வழங்குனர்களும் தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும் வழங்கத் தவறும் பட்சத்தில் உரியவர்களிடம் தவறுகளை இனங்கண்டு சுட்டிக்காட்டும் துணிவுள்ள பிரஜைகளாக மக்களை மாற்றுதல் ஒவ்வொருவரதும் பொறுப்பு என்பதனை வெளிப்படுத்தியதாக மூதூரின் தோப்பூர் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற நாடக ஆற்றுகை அமைந்தது. விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நாடக ஆற்றுகைக் குழுவானது இதனை வழங்கியிருந்தது.

மூதூர் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற ஆற்றுகையினை இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கண்டு பயன்பெற்றனர். சமூகப்பொறுப்புக் கூறல் அல்லது சமூகத்துக்குக் கணக்குக் காட்டல் தொடர்பான கருத்து விளக்கத்தினையும், அதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் பற்றியும் இதில் தெளிவாகப் பார்வையாளர்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டது.

அப்பிரதேச மக்கள் மட்டுமன்றி, மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் ஆ.கரீஸ், உபதலைவர் ஆர். ஹாஜாமுகைதீன் மற்றும் புறநெகும திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் ந.தமிழ்ச்செல்வன், உள்ளூ ராட்சி மன்றத் திணைக்களக் கணக்காளர் திரு. பரமேஸ்வரன், பொறியியலாளர் திருமதி. சித்திரா தேவி, தகவல் தொழினுட்ப நிபுணர் கௌரிபாலன், சமூகப்பாதுகாப்பு நிபுணர் வேல்மாணிக்கம் ஆகியோருடன் இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல நாடக ஆசிரியர் திரு பிரளயன் அவர்களும் இதில் பார்வையாளர்களாகப் பங்கு பற்றியிருந்தனர்.



**பார்வையாளர்களிடமிருந்து பெற்ற கருத்துக்களிற் சில...**

★ மக்களின் கருத்துக்களாகவே நாடகம் இருந்தது. இதுவரை காலமும் அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறும்போது இது பிரதேச சபையினுடையது என்றுதான் நினைத்தோம். ஆனால், இந்நாடகத்தின் மூலம் இத்திட்டத்தில் எங்களுக்கும் சமபங்கு உள்ளது, மக்களாகிய எமக்கான திட்டம் என விளங்கிக் கொண்டோம்.

★ பிரதேச சபைக்கும் மக்களுக்கும் நெருங்கிய உறவு உள்ளது. பல கிளை அலுவலகங்கள் இருந்தாலும் கூட இது எங்களுடையது என இன்றுதான் நன்கு தெளிவாகியுள்ளது. பிரதேசசபை என்பது மக்களுடைய அரசாங்கம் என்பதும் இன்றுதான் தெளிவாக விளங்கிக்கொண்டோம்.

★ பிரதேச சபைகளினதும் அதன் உறுப்பினர்களினதும் கடமைகள் பொறுப்புக்களையும் இந்நாடகத்தின் மூலம் தெளிவாக அறியமுடிந்தது. அரசாங்கத்தின் மூலம் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பிரதேசசபைகளினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன என்பது தெளிவாக விளங்கியது. இவ்வாறான வேலைத் திட்டங்களைச் செய்யும் முன்னர் சமூகமட்ட அமைப்புக்களை, மக்களை ஒன்றிணைத்து, அக்கிராமங்களில் அவர்களின் தேவைகளை இனங்கண்டு திட்டங்களை செய்யவேண்டும் என்பதனையும் இந்நாடகம் உணர்த்தியுள்ளது.

★ அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துகின்றபோது மக்கள் அதனைக் கண்காணிக்க வேண்டும். அத்தோடு அது தொடர்பான கேள்விகளையும் திட்டங்களைச் செயற்படுத்துகின்ற அதிகாரிகளிடம் கேட்கவேண்டும் என்பதனையும் நன்றாக விளங்கிக்கொண்டோம்.

★ திருத்தம்: கடந்த தலைவி இதழில் இதழ் 02 மலர் 02 என்று தவறுதலாக அச்சிடப்பட்டுவிட்டது. இதழ் 02 மலர் 01 என்பதே சரியானது. இதை வாசகர்கள் திருத்தி வாசிக்கவும். ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## அன்புத் தோழியரே!

தமிழ்பேசும் மாவட்டங்களில் இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பலவும் தமது வளர்ச்சிப் படியின் அடுத்த கட்டத்துக்குச் செல்லத் தயாராக நிற்கின்றன. தாம் ஒவ்வொன்றும் நல்ல முகாமைத்துவ முறைகளைக் கற்றுக்கொண்டு சிறந்த திட்டங்களைத் தமது அங்கத்தவர்களின் முன்னேற்றத்திற்காகவும் தத்தமது கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவும் செயற்படுத்தி வந்த இவை தற்போது தமக்குள் வலையமைப்புக்களை உருவாக்கி வருவதைப் பார்க்கின்றோம்.

ஆம், பிரதேசசெயலாளர் பிரிவுகள் தோறும், மாவட்டங்கள் தோறும் மாதர்சங்கங்களின் கொத்தணிகளும் மாவட்ட சமாசங்களும் தோற்றுவிக்கப்படுவதைத்தான் நாமிங்கு குறிப்பிடுகின்றோம். சங்கங்கள் தாம் தனித்து நின்று செய்யமுடியாத பலவேலைத் திட்டங்களை இவ்வலையமைப்புக்களின் மூலம் நிறைவேற்றும் வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

முதலாவதாக, வலையமைப்புக்கள் அதன் அங்கத்தவர்களுக்கு எண்ணிக்கைப் பலத்தைக் கொடுக்கின்றன. அடுத்ததாக, அவை பல்வேறு பிரதேசங்களிலிருந்து பல்வேறு அனுபவங்களுடன் வரும் பெண்களின் அனுபவப் பகிர்வுக்கும் புதிய யுக்திகளை கற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கின்றன. மூன்றாவதாக, தமது பிரதேசத்தில் மட்டுமே காணப்படுகின்றது என எண்ணிக் கொண்டிருந்த குறிப்பிட்ட பிரச்சினைகள் ஏனைய பிரதேசங்களிலும் பெண்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பாதிக்கின்றது என்பதை உணரவைத்து அப்பிரச்சினைக்கான தீர்வுகளைக் காணும் உத்வேகத்தை அளிக்கின்றது. நான்காவதாக, எம்மைச் சுற்றியுள்ள சமூக அரசியல் பிரச்சினைகளை முழுவதுமாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு தேவையான தகவல்களைச் சேகரிக்கும் வசதிகளை அளிக்கின்றது.

மேற்கூறிய முறையில் இயங்கும் வலையமைப்பானது என்னென்ன நன்மைகளை எமது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குக் கொண்டு தரலாம் என்று நினைக்கிறீர்கள்? இவை முக்கியமாக, அரசாங்கத்தினதும் வேறு அரசுசாரா நிறுவனங்களினதும் கொள்கைத் திட்டங்களையும் சட்டங்களையும் தேவையான சந்தர்ப்பங்களில் மாற்றுவித்து எங்கள் நாட்டுப் பெண்களினது வாழ்க்கையில் நீண்டகால மாற்றங்களைக் கொண்டுவர உதவுகின்றன. அரசாங்கம் செயற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்கள் சரியான முறையில் சகலவிதமான பெண்கள் சமூகங்களுக்கும் சென்று சேர்கின்றதா? அல்லது அவை செயற்படுத்துகின்ற முறைகளில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டுமா? உயர்மட்டஅரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி எவ்வாறு திட்டங்களின் வடிவத்தை தமது புலத்திற்கு வேண்டிய முறையில் மாற்றலாம்? அரசுசாரா நிறுவனங்களும் ஐக்கியநாடுகள் ஸ்தாபன நிறுவனங்களும் என்னென்ன விதமான திட்டங்களை முன்னெடுத்தால் பெண்களின் சமூக, பொருளாதாரவளர்ச்சிக்கு அடிகோல முடியும்? என இன்னோரன்ன விடயங்களினைக் குறிப்பிடலாம். இன்னும் ஒருபடி மேலே சென்று ஜனநாயக உரிமைக்காக அபிவிருத்திச் செயன்முறையில் பங்குபற்றலை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் பேரம் பேச முடியும். எடுத்துக்காட்டாக, பெரும்பான்மை அரசியற் கட்சிகள் பெண்களுக்கு வேட்பாளர் நியமனங்களை வழங்குவதில் பாரபட்சமாக நடப்பதனைத் தடுப்பதற்காக அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம். சமூகம் பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தும் சந்தர்ப்பங்கள் உள்ளனவா? அவ்வாறாயின் சமூகமனப்பாங்குகளை மாற்றுவதற்கான பாரிய பிரசார இயக்கத்தினையும் நாம் இதனூடு தோற்றுவிக்கலாம்.

பார்த்தீர்களா? எமது வாழ்க்கையையும் எம்மைச் சுற்றியுள்ள மக்களது வாழ்க்கையையும் முன்னேற்றுவதற்கு எத்தனை வாய்ப்புக்கள் நம் முன்னால் விரிந்து கிடக்கின்றன. விழுது அமைப்பானது மாவட்டங்கள் தோறும் சமாசங்களை அமைப்பதற்கு உதவுகின்றது. அதுமட்டுமன்றி பெண்கள் எமது நாட்டில் நிலைபேறான சமாதானத்தை உருவாக்குவதற்கான முழுமையான வேலைத்திட்டமொன்றினையும் இப்பொழுது முன்னெடுத்து வருகின்றது. ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புச் சபை பிரேரணை 1325இன் செயலாக்கத்தினைப் பிரதேசங்கள் தோறும் வலுப்படுத்துவதன் மூலம் இச்சாதனையை நிறைவேற்ற முன்னிற்கின்றது. தொடரும் இதழ்களில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1325 பிரேரணையைப் பற்றியும் விழுது அமைப்பு அது தொடர்பாகச் செயற்படுத்தவிருக்கும் திட்டங்களைப் பற்றியும் வாசித்துப் பயன்பெறுங்கள்.

**- சாந்தி சச்சிதானந்தம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக இயக்கங்கள் அவசியம் தானா? 2

கடந்த இதழில் சமூக இயக்கங்கள் பற்றியதொரு பொதுவான அறிமுகத்தினை மட்டுமே பார்த்திருந்தோம். இந்த இதழில் சமூகமாற்றங்களினைக் கொண்டு வர எந்தெந்த துறைகளில் அவை தமது ஆதிக்கத்தினைச் செலுத்தலாம் பற்றி ஆராய்வோம்.

இன்று மத்திய கிழக்கு நாடுகளில் ஆரம்பித்து அமெரிக்காவிலும் அதைத் தொடர்ந்து உலகெங்கிலும் சமூக இயக்கங்கள் செயற்பட ஆரம்பித்திருக்கின்றன. கடந்த நூற்றாண்டினூடாக வந்த அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி இவ்வுலகின் வெறும் ஒரு வீதமான மனிதர்களுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கின்றது என்கின்ற உண்மை உறைய ஆரம்பித்ததன் விளைவுதான் இது. 'பாரெங்கும் ஜனநாயகம் வேண்டும்' என்ற கோஷம்தான் கேட்டுக் கொண்டிருக்கின்றது. ஆம், ஜனநாயகக் கட்டமைப்பில் மட்டும்தான் செல்வந்தர்களும் அதிகாரத்திலிருப்பவர்களும் தாம் நினைத்தபடி செயற்பட முடியாதல்லவா? எங்கள் நாட்டிலும், இனப்பிரச்சினை, யுத்தம் காரணமாக ஜனநாயகப் பாரம்பரியங்கள் முழுவதுமாக அழிந்து ஒரு சில குடும்பங்களே சொத்துக்களைக் குவித்து, சொகுசு வாழ்க்கை வாழும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இங்கும் ஓர் சமூக இயக்கமே காத்திரமான, தங்கு திறனுள்ள மாற்றத்தைக் கொண்டுவர வல்ல சக்தி படைத்தது.

தமது சமூக அரசியல் நிலைமைகளை மாற்றுவதற்கான கூட்டுச் செயற்பாடுகளில் மக்கள் ஈடுபடுவதைச் சமூக இயக்கம் என்று வரைவிலக்கணம் கொடுக்கலாம். பொதுவாக யாதாயினும் ஒரு சமூக இயக்கம் அதில் ஈடுபடும் சகல மக்களுக்கும் தேவையான பரந்த பொது இலக்கொன்றை வரித்துக்கொள்ளும். அப்பொழுதுதான், ஆயிரக்கணக்கான மக்கள் அதில் தம்மை இணைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. ஆயினும், அதில் ஈடுபடும் ஒவ்வொரு மக்கள் குழுவினரும் அந்தப் பொது இலக்கினை நோக்கித்தான் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பர் என்பதில்லை. பொது இலக்கை அவர்கள் ஏற்றுக்கொண்டாலும், தத்தமது குறித்த நோக்கங்களை அடையும் குறிக்கோளுடனேயே சமூக இயக்கத்துடன் தம்மை இணைத்துக்கொள்கின்றனர்.


உதாரணமாக, வோல் ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்புப் போராட்டத்தினை எடுத்துக்கொள்ளலாம். அது உலகப் பொருளாதாரக் கட்டமைப்பில் பல்தேசியக் கம்பனிகளினதும் பெரும் நிதி நிறுவனங்களினதும் மேலாதிக்கத்தை எதிர்த்து மக்கள் சார்பான பொருளாதாரக் கட்டமைப்பினைக் கொண்டுவரும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதொரு சமூக இயக்கமாகும் இவ்வியக்கத்துடன் பெண்ணுரிமைவாதிகளும் சேர்ந்தனர். பழங்குடி மக்களின் உரிமைவாதிகளும் இணைந்துகொண்டனர். மாணவர் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் சேர்ந்துகொண்டன.

எல்லோரும் உலகப் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றப்படவேண்டும் என்பதை ஆமோதித்தாலும், அங்கு பெண்ணிலைவாதிகள் ஒவ்வொரு நாட்டு வரவு செலவுத் திட்டத்திலும் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற விடயங்களுக்கு அதிகூடிய நிதிகள் ஒதுக்கப்படவேண்டுமென்று பிரத்தியேகமாய் வாதாடினர். பழங்குடி மக்கள்பிரதிநிதிகளோ, அம்மக்கள் வாழும் பிரதேசங்களின் கனிப்பொருட்களையும் காடுகளையும் சூறையாடும் கம்பனிகளின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று கோரினர். தொழிலாளர்களோ, ஒவ்வொரு உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் தமக்கு வேலைக்கேற்ற கூலி, தரமான தொழிற்சூழல் ஆகியன தரப்படவேண்டும் என்று கோரினர்.

இவ்வாறு தத்தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காகக் கூடும் மக்கள், அத்தேவைகள் அடிப்படைத் தேவையான பாரிய பொருளாதார மீள்கட்டமைப்புச் செய்தலின் மூலமேயே பூர்த்தி செய்யப்படலாம் என்பதை உணர்ந்து ஒன்றாக இணைகின்றனர்.

சகோதரிகளே, எங்கள் ஒவ்வொருவருக்கும் மிக அவசியமாகத் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. இப்பிரச்சினைகளுக்கும் ஏதாவதொரு பாரிய சில சமயங்களில் தேசிய அளவிலான பிரச்சினைகளுக்கும் உள்ள தொடர்புகளை உய்த்துணருவதுதான் சமூக இயக்கங்களைத் தோற்றுவிப்பதற்கானமுதல் படியாகும். உதாரணமாக, இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் சீர்திருத்தம் பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம். உங்கள் யாரிடத்திலும் நீங்கள் மனதில் கொண்டுள்ள மிகப்பெரிய பிரச்சினை என்ன என்று கேட்டால் நிச்சயமாக இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயகத்துக்கு ஒவ்வாததாக இருக்கின்றது என்று சொல்ல மாட்டீர்கள்தானே. ஆனால், உண்மை என்னவெனில் அந்த அரசியலமைப்புச் சட்டம்தான் எங்களுடைய பல அன்றாடப் பிரச்சினைகளுக்குக் காரணமாயிருக்கின்றது. எப்படி என்று கேட்கிறீர்களா? நிறையக் காரணங்களைக் காட்டலாம், ஆனால் நாம் இங்கு ஒரு சில உதாரணங்களை மட்டும் விளக்குகின்றோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை கொண்டுவந்ததன் மூலம் தனியொருவர் கைகளில் அளவுக்கதிகமான அதிகாரங்களைக் கொடுத்திருக்கின்றது. இதனால் ஜனாதிபதி பெரும் ஊழலில் ஈடுபடக்கூடியதாக இருப்பதால் எமது பொருளாதாரம் சீரழிந்து பொருள் பண்டங்களுக்கு விலை ஏறுகிறது. அது சிறுபான்மை இனங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்காததால், இலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் தமக்கு வேண்டிய பொருளாதார அபிவிருத்தியையோ அல்லது அதற்குத் தேவையான காணிக் கொள்கையையோ செயற்படுத்த முடியாமற் போகின்றது. இதனால் அவர்கள் வாழும் இடங்களிலெல்லாம் வேலை வாய்ப்புக்கள் இல்லை. சுயாதீனமான பொதுச் சேவைகள் ஆணைக்குழு நியமிக்க வழி செய்யவில்லை எமது அரசியலமைப்புச் சட்டத்தில். இதனால் எங்கும் அரசியல்வாதிகளும் அமைச்சர்களுமே எமது அரச உத்தியோகத்தர்களை வெருட்டித் தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக்கொண்டு போகிறார்கள். இதனால் மக்கள் தேவைகள் பூர்த்தியடையாமல் அரசியல்வாதிகளின் தேவைகளே எங்கும் பூர்த்தி செய்யப்படுவதைக் காண்கிறோம்.




பார்த்தீர்களா? விலைவாசி ஏறுகிறது, எங்கள் பிள்ளைகளுக்குத் தொழில் வாய்ப்பு இல்லை, அரசியல்வாதிகளின்தலையீடு எங்கு பார்த்தாலும் இருக்கிறது என்று அங்கலாய்க்கின்றோமே தவிர, இதற்கெல்லாம் மூலகாரணம் எது என்று சிறிதளவாவது சிந்தித்திருக்கிறோமா? ஆம், தத்தமது சிறிய பிரச்சினைகளை நாட்டில் காணப்படும் பெரும் பிரச்சினைகளுடன் இணைத்து விளங்கிக் கொள்ளும் மக்கள் குழாம்தான் சமூக இயக்கத்தினைத் தோற்றுவிக்கக்கூடிய மக்களாக உருமாறுவார்கள்.

(தொடரும்...)

# முயற்சித்தால் கிடைக்காமலா போய்விடும்?



கடந்த தலைவியில் பாலாவி மாதர் சங்கத்தின் ஆலமர முன்றலிலிருந்து நகர்ந்து சங்கமானது தமது முயற்சியினால் முன்பள்ளிக் கொட்டகை அமைத்தமை தொடர்பான முயற்சியினைப் பற்றி உங்களுக்குத் தந்திருந்தோம். சொந்தமாகக் காணியில்லாத நிலையில் அப்பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதி திரு. பிரியசாந்த அவர்களின் முயற்சியினால் அரசகாணியொன்றினைத் தமது சங்கத்திற்கெனப் பெற்றிருந்தனர்.

அதில் ஓலையினால் வேயப்பட்ட கொட்டகையொன்றினை அமைத்து முன்பள்ளியினையும் மாலைநேர வகுப்புக்களையும் நடத்தி வந்தனர் என்பதும் நீங்கள் அறிந்ததே. இவர்களது முயற்சியினைக் கண்டு பாராட்டிய இவர்களின் கிராமசேவையாளர் ஜீ. றொஷான் அவர்கள், பிரதேச சபை உறுப்பினர் பிரியசந்த மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நியாஸ் அவர்கள் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அதனை நிரந்தரக் கட்டடமாக அமைப்பதற்காக அரசின் கிராமத்திற்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலைத்திட்டத்தின்கீழ் சுமார் ஒரு மில்லியன் ரூபாயினை இச்சங்கத்திற்கு ஒதுக்குவதற்கு முன்னின்று செயற்பட்டுள்ளனர். இதன் முதற்கட்டமாக முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றுள்ளது. முயன்றால் முடியாதது எதுவுமேயில்லை. தொடரட்டும் உங்கள் பணிகள்!

# தலைவிகள் வரிசையில்....



## விழுது இனங்கண்டுள்ள தலைவிகள் வரிசையில் இம்முறை தலைவியினை அலங்கரிக்கிறார் புத்தளம் மாவட்ட தில்லையடி ஆசிரி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவி இராஜரத்தினம் சுகுணாதேவி

## இராஜரத்தினம் சுகுணாதேவி

சுகுணாதேவி அவர்கள் பல சவால்களுக்கும் தடைகளுக்கும் மத்தியில் கடந்த ஆறு வருடகாலமாகச் சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றார். கிராமப் பெண்களை ஒன்றிணைத்து 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆறு வருட காலமாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தலைவியாக இயங்கி வருகிறார். சங்க யாப்பின்படி தொடர்ந்து தலைவியாக இருக்க முடியாதெனினும் அங்கத்தவர்களின் ஏகோபித்த சம்மதத்துடன் தொடர்ந்து இப்பதவியினை வகிப்பவராகத் திகழ்கின்றார்.

ஆரம்பத்தில் முப்பது அங்கத்தவர்களுடன் இயங்கிய இச்சங்கம் இன்று மூவின மக்களையும் உள்ளடக்கி 120 அங்கத்தவர்களுடன் வெற்றிகரமாகப் பல அபிவிருத்தித் திட்டங்களினை மேற்கொண்டு வருகின்றது. இச்சங்கத்தின் அங்கத்தவர்களின் துரித அபிவிருத்திக்காகச் சிறு குழுக்களாகப் பிரித்து, அங்கத்தவர்களின் குழுச்சேமிப்பினூடாக அவர்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்குக் கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்கு 'ஆசிரி பெண்கள் வங்கி' என்ற பெயருடன் இக்கடன்திட்டத்தை இவர் மேற்கொண்டு வருகிறார். சிறந்த வங்கிக் கட்டமைப்புடன் இது இயங்கி வரு கின்றது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து தமது சங்கத்தின் அங்கத்தவர்களுக்குப் பல்வேறுபட்ட பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதனூடு, அவர்களது ஆளுமை விருத்திக்கு உதவுபவராகவும் இவர் விளங்குகின்றார்.

மேலும் சர்வதேச தினங்கள் மற்றும் அதிவணக்கத்துக்குரிய தினங்களில் மத வேறுபாடின்றி பல்வேறு நிகழ்வுகளை தமது பகுதியில் பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்து அவைகளை நடாத்தியும் வருகின்றார். அத்துடன் அவரது கிராமத்தில் வெண் தாமரை என்ற பெயரில் சிறுவர் சங்கமொன்றையும் ரெலன்ற் ஸ்டார் என்ற இளைஞர் சங்கத்தையும் நடாத்தி வருகின்றார். சிறுவர் சங்கத்தின் இணைப்பாளராகப் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு பாடசாலை செல்வதற்கான உதவிகளை பெற்றுக் கொடுத்து அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதிலும் தமது ஆர்வத்தினைக் காட்டி வருகின்றார். வாழ்வாதார மேம்பாட்டுக்காக வீட்டுத் தோட்டம் செய்பவர்களுக்கு விவசாயத் திணைக்களத்தினூடாக விதைநெல் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மிகவும் வறிய நிலையிலுள்ள சங்க அங்கத்தவர்களுக்கு உலகவங்கியின் நிதித்திட்டத்தின் கீழ் வீட்டுத் திட்டங்களையும் பெற்றுக்கொடுத்து அவர்களின் இருப்பிடத் தேவையினைப் பூர்த்திசெய்வதில் முன்னின்று உழைத்தவராவார்.

இவரது சேவைகளை இனம்கண்ட புத்தளம் பல்நோக்கு கூட்டுறவுச்சங்கம் இவரை 2011ஆம் ஆண்டு யூனியன் தேர்தலில் பல வருடங்களுக்குப் பின் ஒரு பெண் வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளார்கள். 8 ஆண்களுடன் ஒரு பெண் வேட்பாளராக பலத்த எதிர்ப்புகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் துணிச்சலுடன் சங்க அங்கத்தவர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் அதிககூடிய வாக்குகளினால் வெற்றி பெற்றார்.

இதில் இவருக்கு ஆதரவாக நின்று இவரை வெற்றிபெறச் செய்தவர்கள் இவரது சங்க அங்கத்தவர்களும் கிராம மக்களுமேயாவர். இவரது சங்கம் கடந்த வருடத்தின் வடமேல் மாகாண சபைக்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சிறந்த சங்கமாகவும் இவர் சிறந்த சங்கத் தலைவியாகவும் இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் இவரது நேர்மையான முயற்சிக்கும் பணிக்கும் கிடைத்த பாராட்டே.



மனித உரிமைகள் கற்கை நிலையத்தினூடாகப் பயிற்சிகளை பெற்றதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பாகவும் சங்கங்களுக்கான கணக்கு வைப்புமுறை, தலைமைத்துவப் பயிற்சிகள், போதை ஒழிப்பு, சட்ட ஆவணங்களை பூர்த்திசெய்தலில் அதிகாரிகளுக்கு உதவுதல் என இன்னோரன்ன பயிற்சிகளைப் பெற்றதுடன் அதனைப் பிற சங்கங்களுக்கு வழங்குபவராகவும் திகழ்கின்றார்.

மேலும் நேரகாலம் பாராது கஷ்டமென்று ஓடி வருபவர்களை உரிய அதிகாரிகளிடம் அழைத்துச் சென்று அவர்களது துயரங்களைக் களைந்து வைக்கும் ஆபத்பாந்தவனாகவும் திகழ்கின்றார். அத்துடன் விழுதின் அனுசரணையுடன் தென்றல் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட 'இருளில் ஓர் ஒளிக்கீற்று' நிகழ்ச்சியில் சங்கத் தலைவியாகத் தமது செயற்பாடுகளைப் பற்றியும் கலந்துரையாடியுள்ளார். புத்தளம் மாவட்டத்தின் சகல சங்கங்களையும் ஒன்றிணைத்து 'சூரியன் பெண்கள் கூட்டமைப்பின்' ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

**இவரது சேவைகளை இணங்கண்ட புத்தளம் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் இவரை 2011ஆம் ஆண்டு யூனியன் தேர்தலில் பல வருடங்களுக்குப் பின் ஒரு பெண் வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளார்கள். 8 ஆண்களுடன் ஒரு பெண் வேட்பாளராக பலத்த எதிர்ப்புகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் துணிச்சலுடன் சங்க அங்கத்தவர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் அதிகூடிய வாக்குகளினால் வெற்றிபெற்றார்.**

இவரது ஆற்றலைக் கண்டு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இவரை புத்தளம் மாவட்டத்தின் மாவட்ட உத்தியோகத்தராக நியமித்து செயற்பாடுகளினை முன்னெடுத்து வருகின்றது. மேலும் இவரது ஆற்றலை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் இந்தியாவிற்கு அனுப்பி, அங்கு சிறப்புப் பயிற்சிகளினையும் விழுது இவருக்கு வழங்கியுள்ளது. பன்முகப்பட்ட ஆற்றல்களைக் கொண்ட சுகுணாவின் பணிகள் மேலும் சிறப்புற தலைவி வாழ்த்துகின்றாள்.

## வாசகர் வட்டங்களிலிருந்து சில மடல்கள்...

★ பொதுக்கூட்டங்களிலும் பொது நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதனால் எவ்வாறான நன்மைகள் கிடைக்கின்றன என்பதனை இந்த வாசகர்வட்டக் கலந்துரையாடல்கள் மூலமே முதன்முறையாக நாம் உணர்வுரீதியாகப் புரிந்து கொண்டோம். மாறாத துயரங்கள் மற்றும் மனவடுக்களுடன் பிறந்துவிட்டோமே என்பதற்காக ஏனோதானோவென்று வாழ்ந்த எமக்கு, கார்த்திகா மற்றும் கீர்த்தனாவின் அறிமுகமும், அணுகுமுறையும்தான் எம்மை வாழ்வதற்காகத்தான் பிறந்தோமென உணரவைத்தது. அவர்களது பணிகள் எமது கிராமத்தில் தொடர வேண்டும். விழுது தொடர்ந்தும் எங்கள் கிராமத்தில் தம் திட்டங்களை வழங்கி, எம்மை வலுப்படுத்தவேண்டும்.

**மாமடு-கலைவாணி வாசகர் வட்டக்குழு, நெடுங்கேணி**

★ வாசகர் வட்டக்குழு சார்பாக விழுதின் திட்டங்களுக்கு முதற்கண் எமது நன்றிகள். சட்டங்கள் நாம் அறிந்ததில்லை. பிரச்சினைகளைக் கூடிக் கதைத்ததில்லை. அதனால் தீர்வினைப் பெறும் வழியும் எமக்குத் தெரிந்ததில்லை. பிரதேசசபை இருப்பதனை அறிந்திருக்கின்றோம். ஆனால், அதன் செயற்பாடுகளை அறிந்ததில்லை. பத்திரிகைகள் பல வாசித்தோம் ஆனால் உரிமைகள், உணர்வுகள் எதுவுமே எமக்குக் கிடைத்ததில்லை. விழுதின் திட்டத்தின்கீழ் இணைந்து கொண்டோம். ஏதோ எல்லாமே அறிந்தவர்களாக சமூகத்தின் அபிவிருத் திக்கு எதையும் செய்யும் துணிவினை எமக்குத் தந்தது விழுதே தொடர்ந்தும் எங்கள் சமூகங்களில் நீ விருட் சமாய் இருந்து எங்கள் கிராமம் விருத்தி காண ஆதரவு தரவேண்டும்.

**வேலங்குளம் - இளந்தென்றல் வாசகர் வட்டக்குழு, நெடுங்கேணி**

★ ஓடியோடி விரட்டிய துன்பங்களின் மத்தியில் சொந்தக் கிராமங்களில் குடியேறினோம் நாம். வாழ்வதற்காகக் குடியேறிய எமக்கு வளங்களற்ற நிலையில் வாழ்க்கைக்கான போராட்டமே பலனாகக் கிடைத்தது. துன்பத்தைச் சுமந்த எமக்கு கைகொடுத்த விழுது துணிவைத் தந்தது. நான்கு பேர் சேர்ந்து கதைத்தபோது துயரங்கள் குறைந்தன. 'வளங்கள் எம்மண்ணில் இருக்கு உரியவர்களைக் கேளுங்கள் உதவிகள் கிடைக்கும்' என வழிகாட்டியாக இருந்த விழுதின் திட்டங்களுக்கு எமது நன்றிகள்.

**பெரியகுளம்-வாகை வாசகர் வட்டக்குழு, நெடுங்கேணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தர் சபைகளில் பெண்கள்



தலைவியின் முதலாவது இதழில், மத்தியஸ்தர் சபைகளில் வெறும் 4 வீதமாகவுள்ள பெண்களின் பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்கத் தகுதிவாய்ந்த பெண்களை இணைய வருமாறு வேண்டியிருந்தோம். புதிதாகத் தெரிவு செய்யவேண்டிய சபைகளிலும் மற்றும் அமைக்கப்படவுள்ள சபைகளிலும் ஆற்றல்மிக்க, அரசியற் தொடர்புகளற்ற பொருத்தமான பெண்களைச் சிபாரிசு செய்து, பிரதேச செயலகத்திற்கோ அல்லது விழுதிற்கோ அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தோம்.

மிகச் சொற்ப அளவிலேயே பெயர்ப் பட்டியல்கள் கிடைக்கப்பெற்றதனை அடுத்து, இது தொடர்பாக நீதி அமைச்சுடனும் உறுதிப்படுத்தல்களை மேற்கொண்டோம். போதியளவு பெயர்ப்பட்டியல்கள் கிடைக்கப்பெறாதநிலையில் மக்களுக்கு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டிய நிலையில் ஆசிய மன்றத்தின் நிதி அனுசரணையுடன் நீதி அமைச்சின் செயற்றிட்டமொன்றினை கிழக்கு மாகாணத்திலுள்ள 23 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுற்படுத்தும் சந்தர்ப்பம் விழுதிற்குக் கிடைத்தது.

அந்தவகையில் மத்தியஸ்தர் சபைகளில் உள்ளீர்ப்பதற்கென கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விழுது இனம்கண்ட பெண்கள், ஏனைய நிறுவனங்களால் சிபாரிசு செய்யப்பட்ட பெண்களெனத் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான தலைமைத்துவம், சமூக ஒருமைப்பாடு, பால்நிலையும், பெண்களது உரிமைகளும் முரண்பாடும் முரண்பாட்டு முகாமைத்துவமும் மற்றும் மத்தியஸ்தமும் முரண்பாட்டுத் தீர்வியலில் அதன் முக்கியத்துவமும் என்ற விடயங்களில் சிறந்த வளவாளர்களினால் ஆரம்பக் கட்ட தகைமைகாண் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கிட்டத்தட்ட 550 பெண்கள் வரை இப்பயிற்சியினைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகளும் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையமானது, பெண்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்களில் சமூகங்களிடையே சமாதானத்தையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தும் நோக்கில் பெண்களது தீர்மானமெடுக்கும் வகிபாகத்தினைச் சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரத் தளங்களில் ஊக்குவித்து வருகின்றது. இதற்கென சமூகத்தின் அடிமட்டத்திலே செயற்படுகின்ற சமூகமட்ட அமைப்புக்களினை வலுப்படுத்தி, அதனூடாக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வைப்பதில் எமது நிறுவனம் செயற்றிட்டங்களினை முன்னெடுக்கின்றது.

அந்த வகையிலே யாழ். மாவட்டத்திலும் சமூகப்புலங்களிலிருந்து பெற்ற அனுபவங்களினடிப்படையில் மத்தியஸ்தர் சபைகளிலே பெண்களின் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்ற தேவையும் முதன்மையானதாக இனங்காணப்பட்டதன்வழி எதிர்வரும் மாதங்களில் இதே செயற்றிட்டம் அமுற்படுத்தப்படவுள்ளமை உங்கள் கவனத்திற்கு முன்வைக்கப்படுகின்றது. ஆர்வம் கொண்டோர் தாமதமின்றி உங்கள் பிரதேச செயலகங்களை அணுகுங்கள்.

# மாதர் சங்கங்களில் பெண் தலைமைத்துவம்



## இ. சாந்தகுமார்

### முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

இன்றைய காலகட்டத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெண்களின் தலைமைத்துவம் என்பது மதிப்புமிக்க ஒன்றாக நோக்கப்படுகின்றது. அவர்களின் அறிவு, அனுபவம், ஆற்றல்கள் மற்றும் திறன்கள் சிறந்த ஆளுமைப் பண்பினை அவர்களிடம் வளர்த்துள்ளது. இதன்வழி தங்களுடைய தேவைகளைத் தாங்களே நிறைவேற்றும் வல்லமை கொண்டவர்களாகப் பெண்கள் விளங்குகின்றனர். புதிய ஆத்திசூடியின் மொழியில் சொல்வதானால் பெண்கள் சாதிக்கப் பிறந்தவர்கள், சாதனை படைக்கத் துணிந்தவர்கள் என்ற எண்ணம்தான் அவர்களை உயர் நிலைக்குக் கொண்டு செல்கின்றது எனலாம். ஔவையார் கூறியது போல நாங்கள் எங்களால் அறம் செய்யக்கூடிய நிலையில் இல்லாவிட்டாலும்கூட அறம்செய்ய விரும்பினாலே பாதி செய்ததற்குச் சமனானது போலப் பெண்கள் தங்களால் செய்ய முடியாதது ஒன்றுமில்லையென நினைப்பதே பல செயற்பாடுகளை அவர்களைச் செய்ய வைக்கின்றது.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று கூறியவர்களுக்கெலாம் சாட்டை அடி போல் இன்று அவர்களுடைய செயற்பாடுகள் பரந்து விரிந்து முன்னோக்கி இருக்கின்றன. குறிப்பாக, பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் 75 வீதமான மாணவர்கள் பெண்களாகத்தான் இருக்கின்றார்கள். இன்னும் கூறப்போனால் அனைத்து உயர்பதவிகளையும் அலங்கரிப்பவர்களாகப் பெண்கள் இன்று திகழ்கின்றார்கள். இத்தகைய பலம்மிக்க சமுதாயத்தின் வழிதான் சமூக அடிமட்டத்தில் இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளும் எமது பிரதேசங்களில் சிறப்புற நடைபெறுகின்றன.

இன்னும் கூறப்போனால் அதிகம் படிக்காத சங்கத் தலைவிகள் மற்றும் அங்கத்தவர்கள்கூட தமது கிராமத்தினை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும் என்ற தொலைநோக்குடன் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்கள். இதனை நாம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களில் அதிகம் காணமுடிகின்றது. இதனைப் பற்றி இவ்விடத்தில் உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தலைவிகளது அயராத உழைப்பும் நேர்த்தியான பணிகளும் அங்கத்தவர்களை அணிதிரட்டி கருமங்களையாற்றுவதில் ஒன்றிணைந்த தன்மையும்தான் எமது மாவட்டத்தில் இந்த வெற்றிக்குப் பின்புலமாய் அமைந்துள்ளன. மொத்தத்தில் பெண்களின் தலைமைத்துவம் என்பது இத்தகைய சமூகமட்ட அமைப்புக்களின் வழிதான் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

ஓர் சங்கத்தின் சிறப்பான செயற்பாடானது தலைவியின் பொறுப்பில் அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுமுயற்சியில் முன்னெடுக்கப்படுகின்ற அதேநேரம், இளைய தலைமுறையினருக்கு வழிக்காட்டியாகவும் இத்தகைய மாதர் சங்கத் தலைமைகளும் அவர்களுடைய செயற்பாடுகளும் அமைந்து காணப்படுகின்றன. தமது அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுதல், பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கான ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் நல்குதல், வாழ்வாதார முயற்சிகளுக்கான சந்தைவாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுப்பதில் உதவல் மற்றும் கிராமத்தில் இடம்பெறுகின்ற அனைத்து நிகழ்வுகளிலும் தமது அங்கத்தவர்களுடன் பங்குபற்றிப் பணிசெய்தல் என இன்னோரன்ன பணிகள் மாதர் சங்கத் தலைவிகளால் நேர்த்தியாக முன்னெடுக்கப்படுகின்றன.

**அதிகம் படிக்காத சங்கத் தலைவிகள் மற்றும் அங்கத்தவர்கள் கூட தமது கிராமத்தினை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும் என்ற தொலைநோக்குடன் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்கள்**

குறிப்பாக, மாவட்டத்திலே சங்கத்தின் தலைவிகளுடைய வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையிலேயே பல தொழிற் பேட்டைகள் இயங்குகின்றன. உதாரணமாக தையல் மற்றும் நெசவு, விளக்குமாறு, தும்புத்தடி தயாரித்தல், கழிவுப் பொருட்களிலிருந்து மாற்றுற்பத்திகளைச் செய்தல், கச்சான் அல்வா மற்றும் ஐஸ்கிறீம் தயாரித்தல் என உணவுப்பொருட்களின் உற்பத்தி போன்றவற்றை சிறப்பாக உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு வழிநடத்திக்கொண்டு வருகின்றமையும் சிறப்பான விடயங்களாகும்.

**'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று கூறியவர்களுக்கெலாம் சாட்டை அடிபோல் இன்று அவர்களுடைய செயற்பாடுகள் பரந்து விரிந்து முன்னோக்கி இருக்கின்றன**

தமது கிராம அபிவிருத்திக்கென கிடைக்கின்ற அடிக்கட்டுமான ஒப்பந்த வேலைகளினைச் சங்கம் சார்பாக அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் எடுத்து செய்வதன் மூலம் அப்பணம் தனிநபர்களைச் சென்றடையாமல் தமது சங்கத்திற்கான முதலாகப் பெறுவதிலும், தாங்களே உரிய மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்து, நிர்மாணப்பணிகளின் தரம் போன்றவற்றை உறுதிப்படுத்தி, மேற்பார்வை செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய பல காத்திரமான பணிகளை முன்னெடுப்பதில் அவர்களது தலைமைத்துவப் பண்பே ஆதிக்கம் செலுத்துகின்றது. இவர்களது பணி தொடர்ந்தும் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு, தொடரும் பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதில் அரசியல் கட்சிகள்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இலங்கையிலுள்ள பல பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து பலவருட காலமாகப் பெண்களை அரசியலில் இணைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தினைப் எடுத்துக்கூறல் செய்வதில் முன்னின்று உழைத்து வரு கின்றது. இதன் ஒரு வடிவமாகக் கடந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட் டத்தில் UNIFEM திட்டத்தின் ஊடாக 'பெண்களுக் கான வேட்பாளர் நியமனங்களையும், வாக்கு களையும் பெற்றுக் கொடுத்தல்' என்பதனை நோக்காகக் கொண்டு, பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்புடன் இணைந்து இத்திட்டத்தினை அமுற்படுத்தியது.





உள்ளூராட்சி மன்றங்களில் 2 வீதத்திலுள்ள பெண்களின் பெயர் நியமனங்களினை 20 வீதமாக உயர்த்த வேண்டுமென்பதனை மையப்படுத்தி சுமார் 23 பெண்களை கட்சி பேதமின்றி தேர்தலில் போட்டியிட ஊக்குவித்திருந்தது. இந்நிலை 2 வீதத்திலிருந்து 40 வீதமாகும். இதில் இருவர் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கட்சிகளில் போட்டியிட இடம் கிடைத்தாலும் கூட ஆர்வம்கொண்ட ஆளுமை படைத்த பல பெண் களுக்குக் கட்சிகளினால் போட்டியிடும் வாய்ப்பு உட்கட்சி அரசியலினால் மறுக்கப்பட்டிருந்தது. அதில் பாதிக்கப்பட்ட ஆளுமை கொண்ட பல பெண்கள் தாம் கட்சிக்காக எவ்வளவோ உழைத் தாலும் கூட அரசியற் கட்சிகள் தம்மைப் பிரசாரத் திற்காகப் பயன்படுத்துகின்றனவே தவிர தமக்கு உறுதியளித்தபடி தேர்தலில் தமக்கான இடங்களி னைத் தராது, இறுதியில் கழற்றி விடுவதனைப் பொதுவான வழக்கமாகக் கொண்டுள்ளன என்பதனை ஆதங்கத்துடன் தெரிவித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கிண்ணியா பிரதேசத் தில் முதல் முஸ்லிம் பெண்ணைத் தமது கட்சியில் போட்டியிட வைத்த பிரதான அரசியற் கட்சி களிலொன்றான ஐக்கிய தேசியக்கட்சியினை அணுகியபோது, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது கட்சியில் பெண்களை இணைத்துக் கொள்வதற்கான புதிய எதிர்காலத் திட்டங்களிற் சிலவற்றினை எமக்கு முன்வைத்திருந் தார். இதோ அவை உங்களுக்காக!

எதிர்வரும் தேர்தல்களில் ஒவ் வொரு பிரதேசத்திலும் வாக்குச் சாவடியில் இளைஞர் குழு மற்றும் பொதுக்குழுவுடன் பெண்கள் குழுவொன்றும் அமைக்கப்பட விருக்கின்றது. இக்குழுவில் ஆர்வம் கொண்ட இளம்பெண்கள் இணைக் கப்பட்டு அவர்களுக்கான தொடர் பயிற்சிகளும் கொடுக்கப்படும். கட்சித் தொண்டர்களுக்கு அரசியல் விடயங்களிலும் மற்றும் மக்களை அணிதிரட்டும் விடயங்களிலும் பல்வேறான பயிற்சிகளும் கற்கை நெறிகளும் ஒழுங்கமைக்கவென கொழும்பில் 'ஜயவர்தன அகடமி' என்னும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இதில் பயிற்சி பெற்று வெளியேறும் கட்சித் தொண்டர்கள் தத்தமது பிரதேசங்களிலுள்ள விசேட மான பிரச்சினைகளையொட்டி மக்களுக்கு விழிப் புணர்வு நடவடிக்கைகளையும் நிவாரண நடவடிக் கைகளையும் மேற்கொள்ளுவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களின் பிரச்சி னைகளைப் பார்க்கும் குழுக்கள், யானை தாக்கும் பிரதேசங்களைச் சார்ந்த பிரச்சினைக் குழுக்கள், விவசாயிகள் குழுக்கள், மீன்பிடிப் பிரதேசக் குழுக்கள் போன்றன அமைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதையும் எமது கட்சி விரும்புகின்றது.




> **ஆளுமை கொண்ட பல பெண்கள் தாம் கட்சிக்காக எவ்வளவோ உழைத்தாலும்கூட அரசியற் கட்சி கள் தம்மைப் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துகின்றனவே தவிர தமக்கு உறுதியளித்தபடி தேர்தலில் தமக்கான இடங்களினைத் தராது, இறுதியில் கழற்றி விடுவதனைப் பொதுவான வழக்கமாகக் கொண்டுள்ளன**

அவர்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகளைக் கட்சி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்குரிய தீர்வுகளை எடுக்கும் என்பதுடன் மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளுக்கான நிதிகளைப் பெறவும் கட்சி முன்வரும்.

அரசியலில் ஈடுபட விரும்பும் ஆர்வம்கொண்ட பெண்கள் தமக்கு விரும்பிய ஏதாயினும் ஒரு கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டு பணி செய்தல் காலத்தின் கட்டாயமாக அமைகின்றது. அதிகரித்து வரும் பெண்களுக்கெதிரான அநீதியான செயற்பாடுகளினைத் தட்டிக் கேட்கவும் அவர்களுக் கான நியாயம் கிடைக்க உதவுவதற்கும் இந்த அதிகார அரசியற் பலம் தேவையானதொன்றாகி விட்டது. இக்கட்சியின் உறுதி மொழிகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படுகின்றன என்பதனை நடைபெறப்போகும் மாகாண சபைத் தேர்தல்களில் பார்ப்போம். அடுத்து பிறிதொரு பிரதான கட்சியின் செய்தியுடன் உங்களைச் சந்திப்பாள் தலைவி.




# விழுது வளவாளர் மலேசியா பயணம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் வளவாளரான வீ.இராஜசேகர் அவர்களுக்கு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இடம் பெற்ற மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை (MDGs) அடைவதற்கான செயற்பாடுகளினைப் பற்றி மீள்நோக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மா நாட்டில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை விழுது ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இம்மாநாட்டில் ஆசிய, பசுபிக் பிராந்தியங்களினைச் சேர்ந்த 29 நாடு களைச் சேர்ந்த பெண்கள் தொடர்பாகப் பணியாற் றும் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த 120 பிரதிநிதிகள், ஐ.நா. சபையின் வதிவிடப் பிரதிநிதி கள், சர்வதேச கொடைப்பணியாளர்கள்உட்பட மலே சிய அரசாங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவி மற்றும் பங்களாதேஷ் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் களும் பங்குபற்றியிருந்தனர்.

இங்கு தயாரிக்கப்பட்ட அபிவிருத்திசார் நிகழ்ச்சி நிரலானது, ஆசிய, பசுபிக் பிராந்தியத்திலுள்ள மக்க ளின் குரல்கள், தேவைகள் மற்றும் யதார்த்தங்களை உறுதி செய்வதற்கு அங்கு வந்திருந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்துக்கும் செயலுபாயங்களைத் தயாரிப்பதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. இதில் குறிப்பான ஆறு பிரதான விடயங்கள் பாலியல் மற்றும் மீள் உற்பத்தி, ஆரோக்கியம் சகலருக்கும் கிட்டுதல், வறுமை, காலநிலை மாற்றம், இடப் பெயர்வுகளும் புலம்பெயர்வும், உணவுப் பாதுகாப்பு மற்றும் மதத் தீவிரவாதம் ஆகியன கவனத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

எமது நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட நாற் பதாயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகளின் நிலைமை ஆழமாக நோக்கப்பட்டது. அத்துடன் இலங்கையி லிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் வேலை வாய்ப்புக்காகச் செல்கின்ற பெண்கள் உச்சளவில் பாலியல் வன்முறை மற்றும் உடல், உள துன்புறுத் தல்களுக்கும் ஆளாக்கப்படுகின்ற நிலையில் அவ் விடயத்தினை உரிய அதிகாரிகள் பெரிதும் கவனத் திற் கொள்வதில்லை என்ற விடயமும் கருத்திலெடுக் கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இதில் பல முன் மொழிவுகள் வழங்கப்பட்டதுடன் சர்வதேசப் பணிக் கொடையாளர்களின் ஆலோசனைகளும் அவதானங் களும் முன்வைக்கப்பட்டன.

விழுது இம் மாநாட்டில் ஆசிய பசுபிக் வலய நாடுகளில் மிலேனியம் இலக்கு தொடர்பாக முன் மொழிவினை ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்வைத்தல் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான ஒருங்கி ணைப்பை ஏற்படுத்தல், பெண்கள் அபிவிருத்தி தொடர்பான வலையமைப்பு மற்றும் ஆசிய பசுபிக் நாடுகளுக்கிடையிலான பாராளுமன்றப் பிரதிநிதி களைக் கொண்ட வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டு வரை அரசசார்பற்ற நிறுவனங்களின் காத்தி ரமான ஈடுபாடுகளினை உயர்த்தவும் அதன்வழி குறிப் பானதொரு செயலணியினை உருவாக்கவும் இம்மா நாடு உதவுவதாக அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான தேர்தல் நிதியம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் கடந்த இருவருடங்களாக UNIFEM திட்டத்தின்கீழ், திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்களாகப் போட்டியிடத் தயாராகவிருந்த சுமார் 24 பெண்களுக்கான ஆதரவினையும் வழிகாட்டல்களையும் வழங்கியிருந்தது.




## பெண்களுக்கான தேர்தல் நிதியம்

| | |
|---|---|
| ஜனவரி மாதம் வரை கிடைத்த நிதி | - 1150.00 |
| 9 ஆம் வட்டாரம் உதயம் மகளிர் சங்கம் | 150.00 |
| நாகவில் தேடல் மகளிர் சங்கம் | 50.00 |
| உமராபாத் உம்ரா மகளிர் சங்கம் | 150.00 |
| தாயிப் நகர் ஒஸ்மானியா மகளிர் சங்கம் | 50.00 |
| மல்லிஹாபுரம் மல்லிகை மகளிர் சங்கம் | 50.00 |
| திருநெல்வேலி பாரதிபுலம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| சோனக தெரு வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| வண்ணார்பண்ணை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| புத்தூர் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| புதிய சோனக தெரு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| கோட்டை மீனாட்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| ஆணைக்கோட்டை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| வண்ணார்பண்ணை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 100.00 |
| கொழும்புத்துறை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 100.00 |
| கைதடி நுணாவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 100.00 |
| அரியாலை மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| கைதடி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| திருநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| சங்கிலியன்தோப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| யாழ்நகர் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| கணேஸ்வரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் | 50.00 |
| மொத்த தொகை | 2550.00 |

இலங்கையைப் பொறுத்தவரையில் பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதென்பது கத்தியின் மேல் நடப்பதற்கு ஒப்பானது. அரசியற் கட்சிகளின் ஆதரவற்ற தன்மை, பெண்கள் அரசியல் வாழ்க்கைக்கு லாயக்கற்றவர்கள் என்ற ஆண்களின் மனப்பாங்கு, 'சும்மா உந்த அரசியலுக்குள்ள போய் வன்முறைக்குள் அகப்படாமல் குடும்பத்தைப் பார்த்தாலே போதுமென்ற' பெண்களின் மனோநிலை. இதற்கும் மேலாக அரசியற்குப்பைக்குள் போய் பெண்கள் என்ன சாதிக்கப் போகின்றார்களென்ற அறிவுஜீவுகளின் எண்ணப்பாங்கு என இன்னோரன்ன தடைகளைத் தாங்கி, இவ்வருடம் பல பெண்கள் முதற்தடவையாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டிருந்தனர்.

இவர்களது வெற்றி சொல்லக்கூடியளவுக்கு இல்லாவிடினும் கூட இன்னும் அடுத்துவரும் தேர்தல்களில் மூவினங்களினையும் சேர்ந்த பல பெண்கள் போட்டியிடத் தயாராகவுள்ளமையானது விழுதின் முயற்சிக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். இருந்தும் இவர்களுக்கான முழுதளாவிய நிதியினை வழங்கி உதவுவதில் விழுது பலத்த சவாலினை எதிர்கொண்டிருந்தது.

## 'சும்மா உந்த அரசியலுக்குள்ள போய் வன்முறைக்குள் அகப்படாமல் குடும்பத்தைப் பார்த்தாலே போதும்' என்ற பெண்களின் மனநிலை

அதுவும் முதற் தடவையாகப் போட்டியிடுபவர்களை மக்கள் முன் கொண்டுவருவதற்குக் கடும் பிரயத்தனத்தினை மேற்கொண்டிருந்தது. விழுது நிறுவனத்தின் வளப் பற்றாக்குறையும் பிற நிறுவனங்கள் இவர்களுக்கான நிதிகளை வழங்குவதில் காட்டிய தயக்கமும் மற்றும் மக்கள் முன் இவர்களது வேண்டுகோள்களைப் புரிந்துகொள்வதிலேற்பட்ட குழப்பமுமென பிரசாரத்திற்கென இவர்களுக்கு முழுமையாக ஒத்துழைக்க முடியவில்லை. பலர் தமது சொந்த இருப்புக்களை வைத்தும் கடன்களைப் பெற்றும் தமது பிரசாரத் தேவைக்குப் பயன்படுத்தியிருந்தனர்.

இத்தகைய பின்னணியிலேயே, விழுது சமூகமட்ட அமைப்புக்கள் தமது பிரதேசத்தில் போட்டியிட விரும்பும் பெண்களுக்காகத் தேர்தல் நிதியமொன்றினை (Election Fund) ஆரம்பிப்பதற்கு உதவுவது பற்றி முன்னைய இதழ்களில் குறிப்பிட்டிருந்தோம். இவர்களுக்காக உதவும் முகமாக அதற்காக விழுது ஓர் வங்கிக் கணக்கினை ஆரம்பித்திருந்தது. இதற்கு உதவிய சமூக மட்ட அங்கத்தவர்கள், வாசகர் வட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பங்களிப்பினை கடந்த தலைவியில் வெளியிட்டிருந்தோம்.


> "இலங்கையைப் பொறுத்த வரையில் பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதென்பது கத்தியின் மேல் நடப்பதற்கு ஒப்பானது"

குறித்த பகுதியிலிருந்து கிடைத்த தொகை அப்பிரதேசத்தில் போட்டியிடும் பெண்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும். எனவே, நீதிக்காகப் போராடும் பெண்களுக்கு அரசியலில் இடம் கிடைக்கவேண்டுமென விரும்பும் உள்ளங்களும் சமூகமட்ட அமைப்புக்களும் மற்றும் பிற நிறுவனங்களும் இன்றே உங்கள் பங்களிப்பினை நல்க முன்வாருங்கள்.

***நீங்களும் பங்களிப்புச் செய்யலாம். உங்கள் தொகையினை பின்வரும் வங்கிக்கணக்கில் வைப்பிலிடலாம்.***

***கணக்கு இலக்கம்: 1100022753, கொமர்ஷல் வங்கி, வெள்ளவத்தை கிளை, கொழும்பு.***

## தலைதூக்கினாள்



# தலைவி

விழுது அன்னையின் மடியினிலே
உதயமான - இவள் பலர்
இதயம் வென்ற சாகசக்காரி
நாட்டின் கண்களாம்-பெண்களின்
ஏற்றங்களை, மாற்றங்களை
வாட்ட, சாட்டத்துடன்
சொட்டும் குறையாது
நாடெங்கும் தேரோட்டி
பாராட்டி வருகின்றாள்!

பெண்கள் தலைநிமிர வந்த
தலைவியே...!
தகர்த்தப்பட்டது பெண்ணின்
அறியாமை
வேர் அறுக்கப்பட்டது!
பெண்ணின் அடிமைசாசனம்

குறுக்கே வந்த துன்பங்களை
முயற்சியெனும் உழிகொண்டு
புதிய சாதனைகளாய் செதுக்கி
வறுமை, சிறுமை, தாழ்மை-இவை
அனைத்தையும்
தூக்கிலே ஏற்றி
உலகிற்கே ஒளியேற்றும்
உன்னத படைப்பு நீ!

உலகிற்கே உன்
ஆதரவுக் கரங்களினால்
இலைமறை காய்
அறை அருகில் கனிகளாக
திரைமறைவில்
கறைபடியாது காணப்பட்ட
திறமைகளை வரைபடியாது

வாசகரின் உள்ளத்தில்
படியவைத்தாய்
உன்னத செயலாய்...!

கலகம் இல்லாது கழகங்களை
வழி நடத்தி...
பல பயிற்சியாளர்களை
உருவாக்கி...
வளமான பயிற்சிகளை
அறிமுகப்படுத்தி...
தனக்கென்றே சமூகத்தில்
ஓர் முத்திரை பதித்த
தல விருட்சமாய் பாந்து
பல விதைகளை மரமாக்கும்
விழுது அன்னை மடியிலே
உதயமான சாகஷக்காரி நீ!

★ ஜெயக்குமார் சுதர்ஷினி
[அங்கத்தவர்- அறிவகம் வாசகர் வட்டம், கணணி இயக்குனர்--ப.நோ.கூ.ச., புத்தளம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொர்க்கபுரியாகுமா உதயபுரி?

இதுவரை காலமும் நாம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் முன்னோடியான செயற்பாடுகள் பற்றியே பார்த்திருந்தோம். இம்முறை சற்று வித்தியாசமாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள உதயபுரி மகளிர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கமொன்றின் செயற்பாடுகளைப் பற்றிப் பார்ப்போம்.

உதயபுரி கிராம அலுவலர் பிரிவானது பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவுக்கு உட்பட்ட பின்தங்கிய கிராமமாகும். கூடுதலான கூலித் தொழிலாளர்களை இக்கிராமம் உள்ளடக்கியுள்ளது. சமூகமட்ட அமைப்புக்களில் சிறப்பாக இயங்குகின்ற அமைப்பாக உதயபுரி மகளிர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் விளங்குகின்றது.

2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தில் ஆரம்பத்தில் இருபது அங்கத்தவர்கள் மட்டுமே அங்கம் வகித்தனர். ஆனால், இவர்களது சிறந்த செயற்பாடு காரணமாகத் தேவையுணர்ந்த ஏனைய மகளிரும் தாமாகவே இணைந்து கொள்ள ஆரம்பித்தனர். தற்போது இச்சங்கத்தில் சுமார் எழுபது அங்கத்தவர்கள் உள்ளனர்.



குறிப்பாக அடிக்கட்டுமான வசதிகளினை உரிய அதிகாரிகளுடன் கதைத்து தமது கிராமத்திற்கெனப் பெற்றுக் கொள்ளல், தமது பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த வழிகாட்டல், கடனுதவிகளினை வழங்கல், தமது பகுதி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களினை வழங்கி அவர்களது கல்விச் செயற்பாடுகள் தடையின்றி நடைபெற உதவுதல் என இன்னோரன்ன செயற்பாடுகளை இச்சங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இச்சங்கத்தின் தலைவியாக எமலின் ராகல் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இவர்களது முன்னேற்றத்திற்கு அப்பகுதிக்கான கிராம அலுவலர் மற்றும் இதர அங்கத்தவர்களின் முழுமையான ஆதரவே பிரதானமான காரணமாகவுள்ளது. எமலின் இச்சங்கத்தின் தலைவியாக மட்டுமன்றி, பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஆலோசனைக்குழுவின் அங்கத்தவருமாவார். இப்பதவியானது பல பிரதேச சபை உறுப்பினர்களின் உதவிகளைப் பெறவும் வாய்ப்பாகவிருந்தது.

மாதாந்த சந்தா உட்பட இதுவரை அவர்களது சேமிப்பாக ரூபா 1,20,000.00 இனை வைத்துள்ளனர். அரசசார்பற்ற நிறுவனமொன்றின் பங்களிப்புடன் சேமிப்பு நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர். இதனைத் தமது சுழற்சி முறைக் கடனாக அங்கத்தவர்களுக்கு அவர்களது வாழ்வாதார முயற்சிகளுக்காக நன்கு திட்டமிட்டு வழங்கி வருகின்றனர்.

இதுவரையில் 66 பயனாளிகள் இதன்மூலம் பயனுற்றுள்ளனர். மாதாந்தம் ஏழாம் திகதியன்று அவர்களது மாதாந்த ஒன்றுகூடல் இடம்பெறும். இதன்போது விசேடமான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடத்துவதோடு, விழுதின் வழிகாட்டலோடு நிலா, நட்சத்திரம், வானவில் என்ற பெயரிடப்பட்ட வாசகர் வட்டங்களினையும் நடத்தி வருகின்றனர். உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய குட்டி அரசாங்கக் கலந்துரையாடல் மற்றும் சமூக வகைப் பொறுப்பு கூறலுக்கான கருவிகள் பற்றிய கலந்துரையாடல்களின் பின்னர் தமது உப்புவெளிப் பிரதேச சபையினை அணுகி, இச்சங்கத்தினர் இதுவரை காலமும் அமைக்கப்படாதிருந்த தமது பகுதிக்கான நீர்வழிந்தோடக் கூடிய வடிகான் வசதியினைப் பெற்றுள்ளனர். 650 மீற்றர் நீளமான வடிகான் அமைக்கப்பட்டுள்ளதுடன் 400 மீற்றருக்கான அனுமதியையும் பெற்று, பிரதான வடிகானுடன் இதனை இணைத்து, தமது பகுதியில் நீர் தேங்கி நிற்காது வழிந்தோடக்கூடிய வசதியினைத் தமது முயற்சியினால் கிராமத்திற்குப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இன்னும் தமது பகுதிகளில் இடம்பெறுகின்ற சமூகச் சீர்கேடுகளினைக் களைவதற்காக சமூக பொலிஸ் பாதுகாப்புக் குழுவில் இச்சங்கத்திலுள்ள ஆறு பெண்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்களது பகுதியை ஆக்கிரமித்த கசிப்பு விற்பனையை இக்குழுவுடன் இணைந்து ஒழித்ததில் இவர்களுக்கும் பெரும் பங்குண்டு. இன்னும் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீளவும் சேர்த்தல், குடும்பங்களுக்கிடையிலான முரண்பாடுகளினைக் களைதல், சமூக நிகழ்வுகளை முன்னெடுத்தலும், பங்குபற்றலுமென இவர்களது செயற்பாடுகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

இவர்களது செயற்பாடுகள் ஒவ்வொருவரது வாழ்விலும் மறுமலர்ச்சியினை கொண்டுவர வேண்டுமென தலைவி வேண்டுகின்றாள். நீங்களும் அவர்களுக்கு உங்கள் கரங்களைக் கொடுங்கள்.

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அங்கத்துவம் பற்றி...

முன்னைய தலைவியில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் பற்றியதொரு சிறு விளக்கத்தினைப் பெற்றிருந்தோம் இந்த இதழில், அதில் அங்கத்துவம் பெறல் தொடர்பான விடயங்களினைப் பார்ப்போம் ஒரு பெண் குறிப்பிட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவராகவிருக்க வேண்டுமாயின் அவர் சித்தசுவாதீனம் உடைய பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட, இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் பிரஜையாகவிருப்பதுடன், தான் வசிக்கும் கிராமத்தில் தொடர்ந்து குடியிருப்பவராகவும், அங்கு வாக்காளராகவும் பதிவு செய்திருத்தல் வேண்டும். அங்கத்தவராகச் சங்கத்தில் இணைந்து கொண்ட உறுப்பினர் வருடாந்த சந்தாவாக ரூபா 120.00 இனைச் செலுத்தி, தனது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## ஒருவர் சங்கத்தின் உறுப்புரிமையினைப் பின்வரும் காரணங்களால் இழக்கநேரிடும்

- உறுப்பினரது மரணம்.
- குறித்த கிராமத்தினை விட்டு வெளியேறி வேறு கிராமத்தில் வசித்தல்.
- சங்கத்திற்கு அறிவிக்காமலோ அல்லது அனு மதி பெறாதோ தொடர்ச்சியாக மூன்று கூட்டங் களுக்குச் சமுகமளிக்காமை.
- வேறு கிராம அபிவிருத்திச் சங்கம் அல்லது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராக இருத்தல்.
- சங்கத்தின் நோக்கங்களுக்கெதிராகச் செயற்பட்டமை உறுதிப்படுத்தப்படல்.

மொத்தத்தில் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினராவதற்கான அடிப்படைத் தகுதிகள் எவையும் இல்லாத ஒருவர் சங்கத்தின் அங்கத்தவராவதற்கான தகுதியினை இழந்தவராகக் கொள்ளப்படுவார். அடுத்த இதழில் ஒரு சங்கம் எத்தகைய கொள்கைகளை அடைவதற்காகத் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்பது பற்றி நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதங்கள்

மக்களுக்கான தரமான பத்திரிகை. பிரதேசவாரியாகக் காணப்படும் பிரச்சினைகளை அலசுவதோடு அவற்றுக்கான தீர்வுகளைப் பெற குறித்த அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

**- எம். ஆர். எம் மாலிக், பிரதேச செயலர், புத்தளம்.**

* * *

இன உறவுகள், அவற்றின் தொடர்புகள் சமூக அடையாளம் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் கேட்கும் பொழுது எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு ஏற்படுகின்றது.

**- ஏ.எச். செய்னம்பு, 42, சிராஜ்நகர், மயில்தீவு, தம்பலகாமம்.**

* * *

தலைவி காலாண்டு இதழின் மலர் இரண்டில் பெண்களின் வலுவான முன்னேற்றம் கண்டு மனம் பூரித்தேன். பெண்களுக்கும் சமவுரிமை வேண்டும் எனும் வேண்டுகோள் நிறைவேறுவதையிட்டு ஒவ்வொரு பெண்ணும் மகிழ்ச்சி அடைவது நிச்சயம். குறைகள் நிவர்த்திக்கப்பட்டு பெண்கள் ஜெயிக்கும் இக்காலத்தில் தலைவி நமக்கெல்லாம் ஓர் வரப்பிரசாதம். தலைவி தலைமைத்துவத்தை நோக்கி புறப்பட நாமும் செயற்படுவோம்.

**- எஸ். ஆனந்தி, 9 ஆம் வட்டாரம், புத்தளம்.**

* * *

மாதர் சக்தியே மாபெரும் சக்தி என்பதை விழுது நிறுவனம் தலைவி என்ற புதிய செய்தி மடலின் ஊடாக வெளிக்காட்டியுள்ளதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறான தலைவி இதழ் தொடர்ந்தும் வெளிவரவேண்டும். இத்தகைய சாதனைகள் மற்றவர்களின் ஆர்வத்தினையும் ஆற்றலினையும் தட்டிக் கொடுக்கின்றதாக அமைய வேண்டும்.

இலங்கை மட்டுமன்றி ஏனைய நாட்டு சாதனையாளர்களின் சாதனைகளையும் இதில் உள்ளடக்குவதன் மூலம் இவ்வாறு நாமும் செய்யலாம் என்ற எண்ணத்தையும் வளர்க்கமுடியும் என நம்புகின்றேன். புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளிலெல்லாம் தலைவி இதழ் ஒவ்வொரு தலைவியின் கைகளிலும் தவழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**- இ.சாந்தகுமார்,**
**மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.**

* * *

எண் சாண் உடம்புக்குத் தலையே பிரதானமாம். பெண்களைத் தலைவலி என ஒதுக்கும் சமூகத்திற்குத் தலைவி விழிப்பூட்டும் சஞ்சிகையாம். பெண்களின் உழைப்பு, திறமை, சாதனை என்பன மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலேயே திடீரென மலர்ந்தாள் தலைவி. இவள் தலைவி மட்டுமல்ல அடக்கப்பட்டிருக்கும் பெண்களின் தலைவிதியையே மாற்றக்கூடியவள். காலாண்டுக்கொரு முறை கைகளிலே தவழ்ந்தாலும் அவள் கொண்டு வரும் செய்திகளோ குருதியுடன் கலந்து உயிரோட்டமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இம் மலர் மலர்க்கொத்தாக, மலர் மாலையாக மாறவேண்டும் என்ற பேராவலுடன் வாழ்த்துகின்றேன்.

தலைவி மலரின் வாசனையை தூய காற்றுடன் கலக்கவிடும் விழுது நிறுவனத்தினருக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு இம்மலர் வாடாதிருக்க பசளை இட்டுக்கொண்டு இருக்கும் தலைவி இதழாசிரியர், அங்கத்தவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

**- எம். பரீரா மர்சூக், கரம்பை அல்-மினா சங்கத் தலைவி, புத்தளம்.**

* * *

சங்கங்களை வலுவூட்டுவதாக தலைவி இதழ் அமைந்துள்ளது. எங்களுடைய சங்கத்தையும் உங்கள் திட்டத்துடன் இணைத்துக் கொள்வீர்களா?

**- யோசப் பதிமதி, லக்ஷ்மி மாதர் கூட்டுறவு சங்கம்ர, ஏறாவூர்.**

## விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்திடமிருந்து...

அன்புத் தோழியரே உங்களது சங்கங்களினது முன்னோடியான செயற்பாடுகள் தொடர்பான விடயங்களினை எமக்குச் சான்றுகளுடன் அனுப்பி வையுங்கள். அவற்றின் நம்பகத்தன்மைக்கு நீங்களே பொறுப்பாளிகள். உங்களது ஆக்கங்களினை நீங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விழுதின் கிளைகளிலே கையளிக்க முடியும். இயலுமானவர்கள் தலைமையலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கலாம். நீங்கள் தலைவி செய்திமடலினை இலவசமாக விழுதிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஆக்கங்கள் பற்றிய உங்கள் சுதந்திரமான, காத்திரமான கருத்துக்களினை நாம் வரவேற்கின்றோம்.

**உங்கள் கருத்துக்கள் வந்தடைய வேண்டிய முகவரி:**

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**
**இல. 03, ரொரிங்டன் அவெனியூ, கொழும்பு - 07**
**தொலைபேசி/தொலைநகல்: 0112506272/0112585190**
**மின்னஞ்சல் முகவரி: info@viluthu.org**

## தாய்போல் தாங்கும் நம் தலைவி



எதற்கும் துணிந்து முன்வந்து
சாதனை படைக்கத் துணிந்தாள்
உன் துணிவைப் போற்றுகிறேன்
மனதார வாழ்த்துகிறேன்
நீ படைத்த சாதனைகள்
எத்தனை எத்தனையோ!

செய்த உதவிகள் பலகோடி
அவை பலருக்கு
வாழ்க்கையைக் கொடுத்தது
நீ எம் உளத்தில்
ஊக்கத்தை தூண்டிய
தலைமைத்துவம் படைத்த
சர்வகால தேவியே!

அறிவை வளர்த்து
புரியாததை எடுத்துரைத்தாய்
நம்மைச் சிந்தித்துச்
செயலாற்ற வைக்கின்றாய்
நம் தலைவியே!
சித்தரிக்கும் மறைமுகமான
அற்புத செயல்களை
வெளிப்படுத்தும் தலைவியே
நம்மவர்கள் அனைவரும்
ஒற்றுமையாக ஒன்றிணைந்து
உனைப் போற்றுகின்றோம்
சங்கங்கள் வளர்ச்சியுற
வழிகாட்டுகின்றாய்
தலைவியே!

எடுத்த நம் காரியத்தில்
உண்மை உற்சாகம் தந்தாய்
கடவுளாய் தாயாய்... குருவாய்...
எங்களைத் தட்டி அதட்டி
முன்னேற வைக்கின்றாய்
தலைவியே!

உனைப் போற்றுகின்றேன்
இரத்தினப் பொக்கிஷமாய்
வாழ்த்துகின்றேன்.

**- முத்துராசா ராதிகா, 5 ஆம் வட்டாரம், உடப்பு.**

## தலைவியே... நீ எனக்கொன்றும் செய்யவேண்டாம்!

தலைவியே நீ
எனக்கொன்றும் செய்யவேண்டாம்
உன் அடிமை நான்
நீ எனை ஆட்சி
செய்து கொண்டிருக்கிறாய்
என்றோ வீசி எறியப்பட்ட
விதையிலிருந்து இன்று விருட்சமாய்
என் வரவு உன்னால்
பெருமையுறும் என்றால்
நேற்றல்ல... இன்றல்ல...
என்றுமே நான் உன் அடிமைதான்
சாசனம் எழுதித் தரட்டுமா? அல்லது
சாகசம் செய்து காட்டட்டுமா?

தலைவியே நீ
எனக்கொன்றும்
செய்ய வேண்டாம்!
ஆரவாரம் இல்லாமல்
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
பையவே சதிகள் செய்யும்
மாய்மாலக் கூட்டத்தின் பிடியிலிருந்து
நான் உன்னை விடுவிப்பேன்!

தலைவியே நீ
எனக்கொன்றும் செய்ய
வேண்டாம்!
பொறுத்திருந்து பார்
புதுயுகம் என்பது
உனக்கு மட்டும்தான் சொந்தம்

**- தமிழ்ச்செல்வி,**
**தில்லையடி, புத்தளம்.**

## ஒவ்வொரு பெண்ணுக்கும்...



தன் வலிமையை மறைத்து
மென்மையைக்
குணமாகக் காட்டும்
ஒவ்வொரு பெண்ணுக்கும்
துவண்டுவிழும் நேரத்திலும்
வீர முகம் காட்டவேண்டிய
ஒரு ஆண் உள்ளான்...

தன் மதியை அறிவாய் ஒழித்து
அறிவீனமாய் நடக்கும்
ஒவ்வொரு பெண்ணுக்கும்
யாதும் அறிந்தவனாய்
இருக்கவேண்டிய சமுதாய
கட்டாயத்தால் கட்டுப்பட்ட
ஒரு ஆண் உள்ளான்...

உணர்ச்சிவசப்படுவதற்கே பிறந்தவள்
என்ற முத்திரையால் வெதும்பும்
ஒவ்வொரு பெண்ணுக்கும்
தன் மென்மையையும் கண்ணீரையும்
வெளிக்காட்ட உரிமையிழந்த
ஒரு ஆண் உள்ளான்...

ஒரு தாயாய் சமுதாயம் புகுத்திய
கடமைகளால் கட்டுண்ட
தாய் உணரும்...
ஒவ்வொரு பெண்ணுக்கும்
பெற்றெடுத்த குழந்தைகளுக்கு
பணி செய்யும் ஆனந்தம் மறுக்கப்பட்ட
ஒரு ஆண் உள்ளான்...

நிறைவான பணியும்
சமமான ஊதியம் மறுக்கப்படும்
ஒவ்வொரு பெண்ணுக்கும்
இன்னோர் உயிருக்கான
பொருளாதார பாரத்தை
ஏற்று திணறும்
ஒரு ஆண் உள்ளான்...

ஒரு வாகனத்தின் நுண்ணிய
செயற்பாடு கற்றுத் தரப்படாத
ஒவ்வொரு பெண்ணுக்கும்
சமைப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியை
கற்றுத் தரப்படாத
ஒரு ஆண் உள்ளான்...

தன் விடுதலையை நோக்கி
அடி எடுத்து முன்னேறும்
ஒவ்வொரு பெண்ணுக்கும்
தன் விடுதலைக்கான பாதையின்
முட்கள் மறைவதை உணரும்
ஒரு ஆண் உள்ளான்...

**- நான்சி ஸ்மித் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org